**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No :STC 206/2024**

**Prosecution witness : அ.சா.8** **Date : 03.03.2026.**

| | |
|---|---|
| **Name : ஜெகதீஸ்வரி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவராக உள்ளேன். கடந்த 02.08.2023ம் தேதியன்று காலை 08.45 மணியளவில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.கலையரசன் வயது 29, த/பெ வடிவேலு என்பவரை கௌதம் என்பவர் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 01.08.2023 –ம் தேதி இரவு 10.30 மணிளவில் அவர் வீட்டில் மின்சாரம் தாக்கியதாக சொன்னார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1) வலது கையில் வலி இருப்பதாக தெரிவித்தார். மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து 3 நாட்கள் உள்நோயாளியாக பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு மேல் சிகிச்சைக்காக எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேலும் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் என்றுதான் சான்றளிக்கப்பட்டது. விபத்து பதிவேடு **அ.சா.ஆ.8** ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) வழக்கின் புகார்தாரர் எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சென்றாரா என்றால் அங்கு சிகிச்சைக்கு சேர்ந்து நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது.

அங்கிருந்த எலும்பு முறிவு மருத்துவர் எலும்பில் எந்தவிதமான பாதிப்பும் இல்லை என அறிக்கை அளித்தார். வெளிக்காயம் ஏதும் இல்லை என்றால் ஆமாம். வலது கையில் வலி இருப்பதாக கூறியது வேண்டுமென்றே சொல்ல வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. எதன் அடிப்படையில் சொற்பகாயம் என சான்று வழங்கினேன் என்றால் எலும்பு முறிவு மருத்துவர் எலும்பில் எந்த பாதிப்பும் இல்லை என்று கூறியதால் அவர் வழங்கிய சான்றுப்படி சொற்பகாயம் என நான் சான்று வழங்கினேன். எலும்பு முறிவு மருத்துவர் காயம் ஏதுமில்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எதன் அடிப்படையில் நான் சொற்பகாயம் என சான்று வழங்கினேன் என்றால் எலும்பு முறிவு மருத்துவரின் அறிக்கையை வைத்து கொடுத்தேன்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**